# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 46. சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறை

சுற்றுலாத் துறை பல பொது நடவடிக்கைகளுடன் பல்வேறு சேவைகளைக் கொண்டுள்ளது. பின்வரும் தனி அறிவுறுத்தல் குறிப்புகள் பொருந்தும்.

- உணவகங்கள்
- மாநாடுகள் / கருத்தரங்குகள் நடத்துதல்
- வாடகை மகிழூர்ந்து (Rent Taxi) சேவைகளைப் பயன்படுத்துதல்
- முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்துதல்
- பொது மற்றும் தனியார் வாகனத் தரிப்பிடங்கள்
- கழிவுப் பொருட்களைக் கையாளுபவர்கள், தெருக்களைத் தூய்மையாக்குபவர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள்.
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- நீச்சல் தடாகங்கள் மற்றும் கடற்கரைகள்
- மதுபானம் மற்றும் புகையிலை விற்பனை செய்யப்படும் இடங்கள்
- பூங்காக்கள் (சிறுவர் / பொது)
- உள்ளக விளையாட்டு
- உடற்பயிற்சிக் கூடம்
- அலுவலகங்கள்- (அரசு மற்றும் தனியார்))
- அங்காடிகள்

- ஹோட்டல்களைத் திறப்பது அரசாங்க அனுமதிக்கு உட்பட்டது
- அனைத்து வெளிநாட்டு விருந்தினர்களுக்கும் தங்குமிடம் சுகாதார அமைச்சினால் கோவிட் -19 ஐ கட்டுப்படுத்தவும், தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்கவும் தற்போதுள்ள நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டது.
- சிகிச்சை / மருத்துவமனையில் சேர்ப்பதற்கான எந்தவொரு செலவையும் ஈடுகட்ட அனைத்து வெளிநாட்டு விருந்தினர்களுக்கும் சுகாதாரம் மற்றும் பயண காப்பீடு இருக்க வேண்டும்

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**
**வேலை வழங்குனருக்கு**

- Employees அனைத்து ஊழியர்களுக்கும் ஸ்தாபனத்தின் வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்து புத்தறிவு (Orientation)வழங்கப்பட வேண்டும்
- அனைத்து ஊழியர்கள் மற்றும் விருந்தினர்களின் அடையாளம் மற்றும் தொடர்பு விவரங்கள் கண்டிப்பாக பராமரிக்கப்பட வேண்டும் (உள் விருந்தினர்கள் மற்றும் நாள் வருகை விருந்தினர்கள்)
- இந்த ஸ்தாபனம் அனைத்து ஊழியர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் தினமும் உறுதி செய்ய வேண்டும்
- வருகைக்கு முன்பும் மற்றும் அதன் பின்னரும் தினசரி அனைத்து வாடிக்கையாளர்களின் சுகாதார நிலையை சரி பார்ப்பதை ஸ்தாபனம் உறுதி செய்ய வேண்டும்।
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

அறிவுறுத்தும் முறைகள்

- பொதுசனத் தொடர்பு ஊடகங்கள், மற்றும் சமூக ஊடகங்களில் அறிவித்தல் வழங்குதல்
- வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் சுற்றுலா அமைச்சு மூலம் கிடைக்க வழிகாட்டுதல்கள்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

28.06.2020

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.